


செப்டெம்பர் 11 சம்பவத்தில் பங்குபெற்ற தீவிரவாதிகளுக்கு ஜமா இஸ்லாமியா எந்தெந்த வகைகளில் உதவி செய்தது?

அதைத்தான் பார்க்கப் போகிறோம். ஆனால், அதற்கு முன்னால், புரிந்துகொண்டு விடவேண்டிய இன்னொரு முக்கியமான விஷயம் உண்டு. என்னதான் உயிர்த்தோழனாக இருந்தாலும், அப்பேர்ப்பட்ட மகா பயங்கர திட்டத்தை, ஒசாமா பின்லேடன் ஒரு வெளிநாட்டுத் தீவிரவாத அமைப்புடன் பகிர்ந்துகொண்டிருப்பாரா? கொஞ்சம் வெளியே கசிந்தாலும், கும்பலோடு கோவிந்தா என்பது அவருக்குத் தெரியாதா? அல்லது ஹம்பாலிக்குத்தான் தெரியாதா? பல கோடிக்கணக்கில் செலவு செய்து நிறைவேற்றத் திட்டமிட்டிருந்த விஷயம். அல் காயிதாவிலேயே மேல் மட்டத் தலைகள் இரண்டு மூன்று பேரைத் தவிர, வேறு யாருக்கும் தெரியாது. இந்த நிலையில், இந்தோனேஷியாவில் இருந்து இயங்கும் ஒரு குட்டித் தீவிரவாத இயக்கம், அதுவும் தன் அத்தனை அமெரிக்க எதிர்ப்பாளராக இல்லாத இயக்கம். அதனிடம் போய் விவரித்துக் கொண்டிருக்க முடியுமா?

ப்ராக்டிகலாக யோசித்துப் பார்த்தால், இதன் சாத்தியங்கள் மிகவும் குறைவாகவே தெரியும். ஆனாலும் ஒசாமா பின்லேடன் தன் வீரர்களை ஏன் ஜமா இஸ்லாமியாவை நம்பி, தென் கிழக்காசிய நாடுகளுக்குப் பயிற்சி பெற அனுப்பினார்? ஏன் பாலஸ்தீனுக்கு அனுப்பியிருக்கக் கூடாது? ஹமாஸ் உதவாதா? ஹிஸ்புல்லா உதவாதா? அட, பி.எல்.ஓ.வின் உறுப்பு இயக்கங்கள் எத்தனையோ இருக்கின்றன. அவை உதவாதா? எல்லோரையும் விட்டுவிட்டு ஜமாவுடன் ஜமா சேர என்ன காரணம்?

விஷயம் இருக்கிறது. ஜமா இஸ்லாமியாவையும் ஹம்பாலியையும், ஒசாமா பின்லேடனும் அவரது முதன்மைத் தளபதியாக அப்போது இருந்த முஹம்மது அடஃ்பும் முழுமையாக நம்புவதற்கான காரணம் ஒன்றுண்டு. சற்று விரிவாகப் பார்க்கவேண்டும்.

1998-ம் ஆண்டுதான் முதன் முதலாக ஒசாமா பின்லேடன் ஜமா இஸ்லாமியாவின் மூத்த தலைவர்களைத் தொடர்பு கொள்ள முயற்சி மேற்கொண்டார். நேரடியாக அல்லாமல், தனக்கு மிகவும் வேண்டப்பட்ட சில இடைப் பிரமுகர்கள் மூலமாக. (அவர்கள் யார் என்கிற விவரம் வெளிவரவில்லை.)

யூதர்களுக்கும் கிறிஸ்துவர்களுக்கும் எதிராக, அல் காயிதா தொடுக்க உத்தேசித்திருந்த மிக நீண்ட யுத்தத்தின் ஆசியப் பங்காளியாக இணைந்து செயல்பட முடியுமா என்பதுதான் பின்லேடனின் கோரிக்கை. இன்று வரை நீளும் ஜமா அல் காயிதா நட்பின் தொடக்கம் இதுதான்.

பின்லேடனிடமிருந்து அழைப்பு வந்ததும், உடனடியாக ஜமா இஸ்லாமியாவின் தலைவர் அபூபக்கர் பஷீர், ஹம்பாலியை கராச்சிக்கு அனுப்பி வைத்தார். அங்கே ஒசாமாவின் சார்பில்

காலீத் ஷேக் முஹம்மது அவரைச் சந்தித்துப் பேசியதாகத் தெரிகிறது. (இதுவும் உறுதி செய்யமுடியாத தகவல். வேறு யாராவதும் பேசியிருக்கலாம். ஆனால், பெரும்பாலான ஆய்வாளர்கள் காலீத்தான் பேசினார் என்கிறார்கள். செப்டெம்பர் 11 சம்பவம் தொடர்பான அமெரிக்க அரசின் அறிக்கையிலும் இத்தகவல் பதிவாகியிருக்கிறது.) ஒப்பந்தத்தின் அத்தாட்சியாக, ஜமா இஸ்லாமியாவின் போராளிகள் சிலருக்கு, ஆப்கனில் பயிற்சியளிக்க அல் காயிதா ஒப்புக்கொண்டது.

காலீத் ஷேக்கின் மூலம்தான் ஹம்பாலிக்கு முஹம்மது அடீஃப்பின் தொடர்பும் கிடைத்தது. இந்தத் தொடர்பு மிக விரைவில் வலுவாகி, இருவரும் இணை பிரியாத நண்பர்களும் ஆகிப்போனார்கள். ஹம்பாலியை, ஒசாமாவின் ஒரு மினியேச்சர் வடிவமாகவே அடீஃப் பார்த்தார். அல் காயிதா செய்ய விரும்பும் பல காரியங்களுக்கு, ஆசியாவில் ஹம்பாலி ஒரு நிரந்தரப் பிரதிநிதியாக இருந்து செய்து கொடுப்பார் என்றே அடீஃப் நினைத்தார். இதனைப் பல சந்தர்ப்பங்களில் அவர் ஒசாமா பின்லேடனிடமும் தெரிவித்திருக்கிறார்.

ஒசாமாவுக்கு ஆரம்பத்தில் பெரிய அபிப்பிராயம் ஏதுமிருந்ததாகத் தெரியவில்லை என்றாலும், ஹம்பாலியின் தீவிரம், கொள்கைப் பிடிப்பு, மதப் பற்று ஆகியவை அவரையும் கவரவே செய்தன. ஆகவே, தன்னுடைய தளபதியின் விருப்பத்துக்கு அவர் மறுப்பு சொல்லவில்லை.

அவர் ஹம்பாலியை மிகவும் விரும்பத் தொடங்கியதற்கான காரணம், 2000-ம் ஆண்டில் நிகழ்ந்தது.

அப்போது அல் காயிதாவுக்கு ஒரு வினோதமான தேவை ஏற்பட்டது. அடுத்த வருடம் அவர்கள் செய்ய உத்தேசித்திருந்த அமெரிக்கத் தாக்குதல், வெற்றிகரமாக நிறைவேறிவிடுகிற பட்சத்தில், கண்டிப்பாக அமெரிக்கா அப்போது ஒசாமா தங்கியிருந்த ஆப்கனிஸ்தான் மீது போர் தொடுக்கும். யுத்தம் மிகக் கடுமையாகவே இருக்கும். இதில் சந்தேகமில்லை.

அப்படியொரு யுத்தம் வருகிற பட்சத்தில், அல் காயிதாவின் ஆயுதக் கையிருப்பு போதுமான அளவில் இருந்தாக வேண்டும் என்று ஒசாமா நினைத்தார்.

ஆயுதம் என்றால் துப்பாக்கிகளோ, ரெகுலர் வெடிகுண்டுகளோ அல்ல. அவர் எதிர்பார்த்தது உயிரியல் ஆயுதங்கள். கடத்தல் மார்க்கெட்டில் (சில கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் சோவியத் யூனியனிலிருந்து சிதறிய குட்டி நாடுகள் சிலவற்றிலும்) இது கிடைக்கக் கூடிய சங்கதிதான் என்றாலும், அல் காயிதாவின் தேவை அதிகம். வாங்கிக் கட்டுப்படி ஆகாது.

எனவே, அல் காயிதாவுக்கென்று ஓர் உயிரியல் விஞ்ஞானி, சம்பளத்துக்கு முழு நேரமும் பணியாற்றக் கிடைத்தால் உபயோகமாக இருக்கும் என்று ஒசாமா நினைத்தார்.

இதையெல்லாம் படித்துச் சிரிக்கக் கூடாது. தீவிரவாத இயக்கம் என்று பொத்தாம் பொதுவில் சொல்லி விடுகிறோம். ஆனால், ஒவ்வொரு விஷயத்தில் ஓர் அரசாங்கம் எத்தனை கவனம் செலுத்துமோ, அதனைக் காட்டிலும் பல மடங்கு கவனம் செலுத்தி, வேலை பார்க்கிறவர்கள் அவர்கள்.

ஆனால், ஒரு போராளி இயக்கத்தில் விஞ்ஞானியாகப் பணியாற்ற யார் முன்வருவார்கள்? எங்கிருந்து வருவார்கள்? இளைஞர்கள் ஆர்வத்தில் வரலாம். அல்லது கொள்கை பிடித்துப் போய் வரலாம். வாழ்க்கையை யுத்தத்தில் முதலீடு செய்யலாம். ஆனால், ஒரு பி.எச்.டி அளவுக்காவது படித்து முடித்து, சம்பந்தப்பட்ட துறையில் கொஞ்சம் போலாவது சாதித்துக் கொட்டை போட்டுப் பாதி வழுக்கை விழுந்த ஆசாமிகள் யார் விரும்பி வரக்கூடும்?

முதலில் அவருக்கு அல் காயிதாவின் மீதும் அதன் கொள்கை, கோட்பாடுகள் மீதும்

நம்பிக்கையும் பிடிப்பும் ஆர்வமும் இருக்க வேண்டும்.

அடுத்தபடியாக, அவர் உயிரியல் விஞ்ஞானம் படித்த பண்டிதராக இருக்க வேண்டும்.

மூன்றாவதாக, அந்தத் துறையில் ஆயுதம் தயாரிக்கக்கூடிய விற்பன்னராக இருக்க வேண்டும். ஒரு டீமை ஏற்படுத்தி, கணிசமான அளவில் உயிரியல் ஆயுதங்கள் ஸ்டாக் தயார் செய்ய வேண்டும்.

இதெல்லாம் சாத்தியமா?

அல் காயிதா பல இடங்களில் முயற்சி செய்து பார்த்து, தோற்றுத் துவண்டிருந்த நேரம் அது. சாத்தியம்தான் என்று நம்பிக்கை கொடுத்த ஒரே நபர் ஹம்பாலி!

முதலில் ஒசாமா பின்லேடனாலும் அடீஃபாலும் இதை நம்ப முடியவில்லை. உண்மைதானா, அப்படி ஒரு நபர் கிடைப்பாரா என்று திரும்பத் திரும்பக் கேட்டுக்கொண்டே இருந்தார்கள்.

ஹம்பாலி புன்னகை செய்தார். அவரிடம் அப்படியொரு ஆயுதம் இருந்தது அப்போது! அந்த ஆயுதத்தின் பெயர் யாஸித் ஸுஃபாத் (Yazid Sufaat).

மலேசியாவில் ஜோஹார் என்கிற இடத்தில் பிறந்த யாஸித் ஸுஃபாத், முன்னொரு காலத்தில் மலேசிய ராணுவத்தில் ஒரு கேப்டனாகப் பணியாற்றியவர். அதற்கு முன்னால் அவர் படித்தது உயிரியல். அடிப்படை டிகிரி பெற்ற பிறகு அவர் அமெரிக்கா சென்று, சாக்ரமண்டோவில் இருக்கிற கலிஃபோர்னியா மாகாணப் பல்கலைக் கழகத்தில் பயோ கெமிஸ்டிரி துறையில் மேல் படிப்பு முடித்தவர்.

படித்து முடித்து ராணுவத்தில் பணியாற்றினாலும், ஸுஃபாத்துக்கு ஆரம்பத்திலிருந்தே ஜமா இஸ்லாமியாவின் மீது அன்பும் அனுதாபமும் இருந்து வந்திருக்கிறது. அவர் எப்போது, எப்படி ஹம்பாலியைச் சந்தித்தார் என்கிற விவரங்கள் இல்லை. ஆனால், அமெரிக்காவில் அவர் படித்துக் கொண்டிருந்த காலத்திலிருந்தே ஹம்பாலியுடன் அவருக்குத் தொடர்பு இருந்திருக்கிறது.

'நேரடியாக அவர் ஒரு போதும் ஜமா இஸ்லாமியாவுக்காகப் பணியாற்றியதில்லை' என்றுதான் அவரைக் குறித்த ஆவணங்கள் தெரிவிக்கின்றன. ஆனால், ஒரு தேவை என்று ஒசாமா பின்லேடன் கேட்டபோது, ஹம்பாலிக்கு உடனடியாக ஸுஃபாத்தின் நினைவுதான் வந்தது.

தனிப்பட்ட முறையில் தன்னுடைய வேண்டுகோளாக இதனை ஸுஃபாத்திடம் வைத்து, எப்படியாவது அவரை ஆப்கனிஸ்தானுக்கு அனுப்பி வைப்பதாக அவர் முஹம்மது அடீஃப்பிடம் வாக்களித்தார்.

சொன்னபடியே, இரண்டாயிரமாவது ஆண்டின் மத்தியில் ஸுஃபாத், கராச்சி வழியே கந்தஹாருக்கு வந்து சேர்ந்தார். முஹம்மது அடீஃப் அவரை வரவேற்று, அல் காயிதாவின் 'டாக்டரான' ஐமன் அல் ஜவாஹிரியிடம் அழைத்துப் போனார்.

வேண்டியது என்ன? 'அல் காயிதாவுக்கெனப் பிரத்தியேகமாக உயிரியல் ஆயுதங்கள். வலுவானவையாக இருக்க வேண்டும். பிரயோகித்தால், பிராந்தியத்தில் ஒரு ஜீவராசி உயிருடன் இருக்கக் கூடாது. அந்தளவுக்கு வீரியம் வேண்டும். தவிரவும் கணிசமாக வேண்டும். என்ன செலவானாலும் பரவாயில்லை.'

ஆந்த்ராக்ஸ் என்னும் ஆயுதத்தை அல் காயிதாவுக்கு முதன் முதலில் அப்போதுதான் அறிமுகம் செய்து வைத்தார் ஸுஃபாத். ஆப்கனிஸ்தானில், கந்தஹார் விமான நிலையத்தை அடுத்த ஒரு வெற்று வெளியில், அவருக்கான பிரத்தியேக ஆய்வுச் சாலை ஒன்று உருவாக்கப்பட்டது.

கட்டுமானத்துக்குத் தேவையான மூலப் பொருள்களை அப்போதைய தாலிபன் ஆட்சியாளர்களே கொண்டு வந்து கொட்டினார்கள். பல அடுக்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. சுற்று வட்டாரத்தில் மூன்று கிலோ மீட்டர் பரப்புக்கு ஒரு ஈ, காக்கா கூட நுழைய முடியாதபடி பாதுகாப்பு வளையம் பலப்படுத்தப்பட்டது.

ஸுஃபாத், சில அல் காயிதா போராளிகள், ஆப்கனில் பயாலஜி படித்துக்கொண்டிருந்த பையன்களை மட்டும் உதவி ஒத்தாசைக்கு வைத்துக்கொண்டு, வேலையை ஆரம்பித்தார்.

ஆப்கன் யுத்தத்தில் அல் காயிதா பயன்படுத்திய உயிரியல் ஆயுதங்கள் குறித்தும், கந்தஹாருக்கு வெளியே ஓரிடத்தில் நூற்றுக்கணக்கான காட்டெருமைகள் மீது அவை பிரயோகிக்கப்பட்டு, பரிசோதிக்கப்பட்டது குறித்த சாட்டிலைட் படங்கள் வெளியானது குறித்தும் ஏற்கெனவே பார்த்திருக்கிறோம்.

இந்த இடத்தில் இது நினைவுகூரப்படுவதன் காரணம், ஹம்பாலி அனுப்பிய ஓர் ஆள் சொன்ன காரியத்தை வெற்றிகரமாகச் செய்து முடித்து, ஒசாமா பின்லேடனின் நம்பிக்கைக்குரிய இயக்கமாக ஜமா இஸ்லாமியா உருவானது எப்படி என்பதைச் சுட்டிக்காட்டுவதற்காக மட்டுமே.

இந்த நம்பிக்கையால்தான், கராச்சியில் பயிற்சி முடித்த ஆட்களை ஜமா இஸ்லாமியாவிடம் அனுப்பலாம் என்று காலீத் ஷேக் முஹம்மது முடிவு செய்தார். ஒசாமாவும் சம்மதித்தார்.

அப்படிப் போனவர்களின் பெயர்களை மட்டும் இப்போது பார்த்துவிடுவோம். போய் என்ன கற்றுக்கொண்டார்கள், எப்படியெல்லாம் செயல்பட்டார்கள் என்கிற விவரத்தை அடுத்த அத்தியாயத்தில் பார்க்கலாம்.

ஹம்பாலியிடம் போன அல் காயிதாக்காரர்கள் மொத்தம் எத்தனை பேர் என்பது குறித்த சரியான விவரங்கள் கிடையாது. ஆனால், சில முக்கியமான நபர்கள் அங்கே போயிருக்கிறார்கள். அவர்களுள் கல்லாத் (Kalladh) என்கிற தாஃபிக் பின் அட்டாஷ் ஒருவன். செப்டெம்பர் 11 சம்பவத்தில் இவனுக்கு நேரடித் தொடர்பு மிகக் குறைவு என்றாலும், யு.எஸ்.எஸ். கோல் என்கிற அமெரிக்கக் கப்பலைத் தகர்த்த அல் காயிதாவின் வேறொரு நடவடிக்கையில் சம்பந்தப்பட்டவன் இவன்.

நவாப் அல் ஹஜ்மி, காலீத் அல் மிஹ்தர் என்கிற இரண்டு செப்டெம்பர் - 11 கடத்தல்காரர்கள், ஹம்பாலியிடம் போயிருப்பது உறுதி செய்யப்பட்டிருக்கிறது.

இவர்கள் எல்லோரும் போய், பயிற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த காலத்தில், திடீரென்று முஹம்மது அடஃப், ஜக்கரியாஸ் மூசாவி என்கிற இன்னொரு புது முகத்தையும் ஹம்பாலியிடம் அனுப்பிவைத்தார்.

ரொம்ப விவகாரமான ஆள் அவன்.